


கழகத் தலைவர், முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்தநாளினை முன்னிட்டு புதுக்கோட்டை தெற்கு மாவட்டக் கழகம் திருமயம் சட்டமன்ற தொகுதியில் உள்ள 101 ஊராட்சிகளில் 101 நாட்களுக்கு விடியல் விருந்து உணவு வழங்கும் நிகழ்ச்சி கழக மாநில மருத்துவர் அணி இணைச் செயலாளர் டாக்டர் அண்ணாமலை ரகுபதி ஒருங்கிணைப்பில் 50வது நாளாக திருமயம் சட்டமன்றத் தொகுதி லெம்பலக்குடி ஊராட்சி பகுதியில் புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளர் இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி தலைமையில் நடைபெற்ற விடியல் விருந்து உணவு வழங்கும் நிகழ்ச்சியில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் கலந்துகொண்டு நிகழ்ச்சியை துவக்கி வைத்து 500 மேற்பட்ட நபர்களுக்கு காலை உணவு வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மாநில விவசாய அணி துணை தலைவர் த.சந்திரசேகரன், கேரளா மாநில கழக அமைப்பாளர் முருகேசன், ஒன்றியக் கழக செயலாளர்கள் இரா.கணேசன், அழகு சிதம்பரம், க.மதியழகன், எம்.பி.சரவணன், கே.ஆர்.ராமசாமி, இரா.மேகநாதன், சிவக்குமார் மற்றும் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.




அரசுத்துறைகளின் சேவைகளையும், திட்டங்களையும் மக்களின் வாழ்விடங்களுக்கே சென்று வழங்கிடவும், மக்கள் கோரிக்கைளுக்கு தீர்வு கண்டிடவும், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 'உங்களுடன் ஸ்டாலின்' திட்டத்தின் சிறப்பு முகாமினை, மன்னார்குடி தொகுதி, மத்திய ஒன்றியத்திற்கு உட்பட்ட நெடுவாக்கோட்டை கிராமத்தில் தொழில்துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா துவக்கி வைத்து, பல்வேறு துறைகளின் தீர்வுகோணப்பட்ட கோரிக்கைகளுக்கான பலனை பயனாளர்களுக்கு வழங்கினார்.மாவட்ட ஆட்சியர் மோகனசுந்தரம், ஒன்றிய செயலாளர்கள் சித்தேரி சிவா, டி.எஸ்.டி.முத்துவேல், பொதுக்குழு உறுப்பினர் காஞ்சித்துரை உள்ளிட்ட நிர்வாகிகள் உடன் இருந்தனர்,

ஒன்றிய அரசு ஊழியர்களுக்கான

# எட்டாவது ஊதியக் குழு அமைப்பதில் தாமதம் ஏன்?

## நிதி அமைச்சரிடம் – டி.ஆர்.பாலு, எம்.பி. கேள்வி!



புதுடெல்லி, ஜூலை 24-

மத்திய அரசு அலுவலர்கள் மற்றும் ஓய்வூதியர்களுக்கு எதிர்வரும் 2026 ஜனவரித் திங்கள் முதல் புதிய சம்பளம் மற்றும் சலுகைகள் திருத்தி அமைக்கப் படவேண்டும். தற்போதைய ஊதிய விகிதங்கள் ஜனவரி 2016 முதல் ஏழாவது ஊதிய ஆணையத்தின் பரிந்துரையின் அடிப்படையில் மாற்றப்பட்டு அமலில் உள்ளது. இது பத்து ஆண்டு காலத்துக்கு நடைமுறையில் இருக்கும் . எனவே ஜனவரி 2026 முதல் மத்திய அரசின் அலுவலர்கள், அதிகாரிகள் மற்றும் ஓய்வூதியதாரர்கள் என அனைவருக்கும் உயர்த் தப்பட்ட ஊதிய அமைப்பு செயல்பாட்டுக்கு வரவேண்டும்.

இந்நிலையில், ஒன்றிய அரசின் வழக்கப்படி சென்ற ஜனவரிமாதத்திலேயே எட்டாவது ஊதிய ஆணையம் அமைக்க ஒன்றிய அமைச்சரவை முடிவு எடுத்ததாக அரசு செய்தி வெளியிட்டது . ஒன்றிய அமைச்சர் அஸ்வின் வைஷ்ணவ் இந்த தகவலை ஊடகக் கூட்டம் வாயிலாக இதனைத் தெரிவித்தார். அப்போது டெல்லி சட்டப் பேரவைத் தேர்தல் அறிவிக்கை தேர்தல் ஆணையத்தால் வெளியிடப் பட்ட நிலையில் கட்சிகளின் பிரச்சாரம் கூட துவங்கி விட்டிருந்தன என்பதும் குறிப்பிடத் தக்கது. இருப்பினும் ஆறுமாத காலம் கடந்த பிறகும் எட்டாவது ஊதிய ஆணையம் அமைப்பதற்கான எந்த அறிகுறியும் இதுகாறும் இல்லாததால் 21.7.2025 அன்று தொடங்கிய நாடாளுமன்ற மழைக்கால கூட்டத் தொடரின் முதல் நாளிலேயே இந்த விஷயம் குறித்து மக்களவையில் திருப்பெரும்புதூர் நாடாளுமன்றத் தொகுதி தி.மு.க. உறுப்பினரும், தி.மு.க. மக்களவைக் குழுவின் தலைவருமான டி.ஆர்.பாலு வினா எழுப்பினார்.

அது வருமாறு:-

ஊதிய ஆணையம் எப்போது அமைக்கப்படும்?

எட்டாவது ஊதிய ஆணையத்தின் தலைவர்கள், உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டு எப்போது அரசிதழில் அறிவிக்கை வெளியாகும்? ஊதியக்குழுவின் பரிந்துரைகள் பெறப்பட்ட பின் எப்போது புதிய சம்பளம்? ஒன்றிய அரசின் அலுவலர்களுக்கும், அதுபோல உயர்த்தப்பட்ட பென்சன் ஓய்வூதியர்களுக்கும் எப்போது நடைமுறைக்கு வரும் என்று தனது கேள்வியில் டி.ஆர். பாலு எம்.பி. நிதி அமைச்சரிடம் வினவினார்.

இந்தக் கேள்விக்கு ஒன்றிய நிதி அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் சார்பாக நிதித்துறையின் இணை அமைச்சர் பங்கஜ் சவுத்ரி அவர்கள் 21.7.2025 அன்று பதில் அளித்தார். எழுத்துப்பூர்வமாக மக்களவையில் இணை அமைச்சர் அளித்த தனது பதிலில் தெரிவித்ததாவது:

"எட்டாவது ஊதிய ஆணையம் அமைக்க ஒன்றிய அரசு முடிவெடுத்துள்ளது. இது தொடர்பாக முக்கியமாக அக்கறை கொண்ட பாதுகாப்பு, உள்துறை உள்ளிட்ட அமைச்சகங்களுடன் ஆலோசனை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதன் பிறகு ஊதிய ஆணையம் தொடர்பான அறிவிக்கை வெளியிடப் படும். அதன் பின் ஊதிய ஆணையத்தின் தலைவர் நியமிக்க படுவார். ஆணையத்தின் பரிந்துரைகள் கிடைத்தபிறகு, அவற்றின் மீது அரசு முடிவெடுத்த உடன் புதிய சம்பள விகிதங்கள் நடைமுறைக்கு வரும்."

நாடாளுமன்றத்தில் ஒன்றிய நிதித்துறை ளஅமைச்சர் அளித்துள்ள இந்த பதிலில் எட்டாவது ஊதியக்குழு அமைப்பது குறித்தோ, தலைவர் நியமனம் பற்றியோ, ஒன்றிய அரசின் ஒன்றேகால் கோடி ஊழியர்கள் மற்றும் ஓய்வூதிய தாரர்கள் மிகவும் எதிர்பார்த்துக் காத்திருக்கும் ஊதிய, ஓய்வூதிய உயர்வு குறித்தோ எவ்வித தெளிவான உறுதியான தகவல் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.




திருவாரூர் மாவட்ட தி.மு.க. இளைஞரணி சார்பில் திருத்துறைப்பூண்டி ஒன்றியம் தண்டலச்சேரியில் கலைஞர் நூலகம் அமைக்கப்பட்டு, தாட்கோ தலைவர் மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் நா.இளையராஜா தலைமையில், மாவட்டச் செயலாளர் பூண்டி கலைவாணன் எம்.எல்.ஏ. திறந்து வைத்தார். மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் சி.ஆனந்த்குமார், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் பணங்குடி ஏ.எஸ்.குமார், துணை அமைப்பாளர்கள் வினோத்குமார், எம்.பி.எடிசன், வி.கே.எம்.முருகானந்தம், தாகிர் அலி, ஒன்றியச் செயலாளர்கள் பிரகாஷ், வீ.எஸ்.ஆர்.தேவதாஸ், பால.ஞானவேல், இரா.மனோகரன், மாவட்ட துணைச் செயலாளர் எம்.எஸ்.கார்த்திக், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆர்.எஸ்.பாண்டியன், மாவட்ட விளையாட்டு அணி அமைப்பாளர் எம்.என்.ராஜா மற்றும் இளைஞர் அணி நிர்வாகிகள் உடனிருந்தனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### எஸ். பழனியப்பன்

**ஜூலை 24 (2014)**



**திராவிட இயக்கத்தில் துவக்க கால உறுப்பினராக இருந்தவர்.**

**உடுமலைப்பேட்டை நகரத்தில் வட்டச் செயலாளராக பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.**

**உடுமலைப்பேட்டை நகர்மன்ற உறுப்பினராக நான்கு முறை தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.**

**இவர் கூட்டுறவு வங்கி – வீடுகட்டும் சங்கம் – ஆதிதிராவிடர் கூட்டுறவு நாணய சங்கம் போன்ற கூட்டுறவு சங்கங்களில் உறுப்பினராகவும், இயக்குநராகவும் பதவி வகித்தவர்.**

**கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டதோடு, மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# நாடாளுமன்ற குளிர்கால கூட்டத்தொடர்!

## நேற்று முன்தினம் (22 – 7 – 2025) நிகழ்வுகள்!



### 1. மாற்றுத் திறனாளிகளுக்கு உள்ளாட்சி அமைப்புகளில் இடஒதுக்கீடு எப்போது?

**கனிமொழி கருணாநிதி கேள்வி!**



தமிழ்நாட்டில் உள்ளாட்சி அமைப்புகளில் மாற்றுத் திறனாளிகளை உறுப்பினர்களாக நியமிக்கும் சட்டத் திருத்தம் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் நிறைவேற்றப்பட்டுள்ள நிலையில்

இந்த விவகாரம் குறித்து ஒன்றிய சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் துறை அமைச்சரிடம், தி.மு.க. நாடாளுமன்றக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி எம்.பி. கேள்வி எழுப்பியுள்ளார்.

பஞ்சாயத்துகள் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் மாற்றுத் திறனாளிகளுக்கு இடஒதுக்கீடு வழங்கிய மாநிலங்கள் எவை? இடஒதுக்கீடு செயல்படுத்தப்பட்ட ஆண்டு குறித்த தகவல்கள் என்ன?

அரசு நிர்வாகத்தில் மாற்றுத் திறனாளிகளின் பிரதிநித்துவம் தொடர்ந்து குறைவாக இருக்கும் நிலையில், நாடு முழுவதும் உள்ள உள்ளாட்சிஅமைப்புகளில் மாற்றுத் திறனாளிகளுக்கு இடஒதுக்கீடு வழங்குவதற்கு தேசிய அளவிலான கொள்கையை கொண்டு வருவதற்கோ, இது தொடர்புடைய சட்டங்களை திருத்தவோ ஒன்றிய அரசு திட்டம் வைத்திருக்கிறதா? அப்படியானால், அதன் விவரங்கள்;

மாற்றுத் திறனாளிகளுக்கு உள்ளாட்சி அமைப்புகளில் இட ஒதுக்கீடு வழங்குவது தொடர்பாக தேர்தல் ஆணையம், தேசிய மாற்றுத் திறனாளிகள் ஆணையம் மற்றும் நிபுணர் குழுவிடமிருந்து ஏதேனும் பரிந்துரைகள் பெறப்பட்டுள்ளதா, அப்படியானால், அதன் விவரங்கள் என்ன?

ஜனநாயக நிர்வாகத்தின் அனைத்து நிலைகளிலும் மாற்றுத் திறனாளிகளின் அரசியல் பங்கேற்பு மற்றும் பிரதிநிதித்துவத்தை உறுதி செய்வதற்கு ஒன்றிய அரசு மேற்கொண்டுள்ள அல்லது மேற்கொள்ள உத்தேசித்துள்ள நடவடிக்கைகள் என்ன? ஆகிய கேள்விகளை கனிமொழி கருணாநிதி எம்பி எழுப்பினார்.

### 2. தமிழ்நாட்டில் சூரிய மற்றும் காற்றாலை மின்சக்தி

**ஆர்.கிரிராஜன் கோரிக்கை!**



தமிழ்நாட்டில் சூரிய மற்றும் காற்றாலை மின் நிலையங்களை அமைப்பதற்கு ஒன்றிய அரசாங்கத்திடம் உள்ளதிட்டம் குறித்து தி.மு.க. மாநிலங்கலவை உறுப்பினர் ஆர்.கிரிராஜன் கேள்வி எழுப்பியுள்ளார்.

50 மெகாவாட் திறன் கொண்ட சூரிய மற்றும் காற்றாலை மின் நிலையங்களை அமைப்பதற்கு ஒதுக்கப்பட்ட நிதியின் விவரங்கள், கடந்த 5 ஆண்டுகளில் தமிழ்நாட்டில் அமைக்கப்பட்ட 50 மெகாவாட் அல்லது அதற்கு மேற்பட்ட நிறுவப்பட்ட திறன் கொண்ட சூரிய மின் நிலையங்கள் மற்றும் காற்றாலை மின் நிலையங்களின் பட்டியல், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மின் நிலையங்களை நிறுவுவதில் அமைச்சகம் மற்றும் REC லிமிடெட், PFC லிமிடெட் போன்ற மின் நிதி நிறுவனங்கள் மூலம் வழங்கப்பட்ட மானியம் மற்றும் இந்த மின் நிலையங்களின் தற்போதைய நிலை குறித்த விவரங்கள் மற்றும் தமிழ்நாட்டில் உள்ள பல்வேறு ஆதாரங்களில் இருந்து புதுப்பிக்கத்தக்க எரிசக்தியைப் பயன்படுத்த அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகள் மற்றும் 2030 ஆம் ஆண்டுக்கு நிர்ணயிக்கப்பட்ட இலக்கு என்ன என்பது குறித்து விரிவான பதிலளிக்குமாறு ஒன்றிய அரசிடம் அவர் கேட்டுள்ளார்.

### 3. விளைபொருட்கள் போக்குவரத்தில் சிரமங்கள் நடவடிக்கை என்ன?

**தருமபுரி ஆ.மணி கேள்வி!**



விவசாயிகள் தங்கள் விளை பொருட்களை சந்தைகளுக்கு கொண்டு செல்வதில் அதிக சிரமங்களை எதிர்கொள்வது குறித்து கவலை தெரிவித்து அதற்கு ஒன்றிய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்களவையில் திமுக எம்.பி. ஆ. மணி தன் கேள்விகளை முன்வைத்துள்ளார்.

விவசாயிகள் தங்கள் விளைபொருட்களை முக்கிய சந்தைகளுக்கு கொண்டு செல்வதற்கும், தங்கள் விளைபொருட்களுக்கு சிறந்த விலையைப் பெறுவதற்கும், தமிழ்நாட்டின் கிராமப்புறப் பகுதிகளில் போக்குவரத்து சிக்கலைச் சமாளிக்க அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகள் என்ன? விவசாயிகள் தங்கள் விளைபொருட்களை அதிக லாபத்திற்காக முக்கிய சந்தைகளுக்கு எளிதாக எடுத்துச் செல்லக்கூடிய வகையில் அரசாங்கம் எதிர்நோக்கும் மாற்றுவழிகள் பற்றிய விவரங்கள்; மற்றும்

தமிழ்நாடு உட்பட நாடு முழுவதும் உள்ள விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்க அரசு ஏதேனும் நடவடிக்கைகளை எடுக்க முன்மொழிகிறதா, அப்படியானால், அதன் விவரங்கள் என்ன? என்றும் அவர் கேட்டுள்ளார்.

நூறு நாள் வேலை திட்டத்தின் நிதி ஒதுக்கீடு குறித்து நாடாளுமன்றத்தில் தொடர்ந்து கேள்வி எழுப்பி வரும் தி.மு.க. எம்.பி.க்கள்.

### 4. நூறு நாள் வேலை திட்டத்தை நிறுத்துகிறதா ஒன்றிய அரசு?

**சேலம் செல்வகணபதி கேள்வி!**



மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதித் திட்டத்தின் (MGNREGS) கீழ் ஒன்றிய அரசு நிதி வெளியிடாதது குறித்து பல மாநில அரசுகள் கேள்வி எழுப்பியுள்ளதை சுட்டிக்காட்டி நாடாளுமன்றத்தில் திமுக மக்களவை உறுப்பினர் செல்வகணபதி பேசியுள்ளார். நூறு நாள் வேலை திட்டத்திற்கான நிதி ஒதுக்கீட்டை பல ஆண்டுகளாக ஒன்றிய அரசு குறைத்து வருவது ஏன் என்றும் ஒன்றிய அரசுக்கு இத்திட்டத்தை முழுவதுமாக நிறுத்திவிடும் திட்டம் இருக்கிறதா என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

### 5. தமிழ்நாட்டில் நூறு நாள் வேலை திட்டத்தின் பயனாளிகள் எண்ணிக்கை

**தமிழச்சி தங்கபாண்டியன்**



கடந்த மூன்று ஆண்டுகளில் தமிழ்நாட்டில் உருவாக்கப்பட்ட மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உத்தரவாதத் திட்டத்தின் (MGNREGS) இதுவரை வேலைவாய்ப்பு பெற்ற நபர்களின் எண்ணிக்கை மற்றும் நாட்களின் விவரங்கள் குறித்து தென் சென்னை மக்களவை உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் கேள்வி எழுப்பியுள்ளார்.

அதில், இத்திட்டத்திலுள்ள நிதி பற்றாக் குறைகள், நிலுவையில் உள்ள ஊதியம், பிரதான் மந்திரி வீட்டுவசதித் திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டிற்கான ஒதுக்கீடுகள் குறைக்கப்படுவது மற்றும் தாமதமாவது என பல்வேறு விசயங்கள் குறித்து கேட்டுள்ளார்.

கிராமப்புற சாலை மேம்பாட்டில், குறிப்பாக தமிழ்நாட்டின் தெற்கு மாவட்டங்களில், மாநிலங்களுக்கு இடையேயான ஏற்றத்தாழ்வை நிவர்த்தி செய்ய அரசு எடுத்த நடவடிக்கைகள் மற்றும் கிராமப்புற திட்டமிடல் மற்றும் சிறந்த நடைமுறைகளை ஒன்றிய அரசு தமிழ்நாடு மாதிரியை தேசிய அளவில் கொண்டு செல்ல வகுத்துள்ள திட்டங்கள் குறித்தும் அவர் கேட்டுள்ளார்.

### 6. நூறு நாள் வேலை திட்டத்தை விரிவுபடுத்துக!

**கள்ளகுறிச்சி மலையரசன் கோரிக்கை!**



மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உத்தரவாதத் திட்டத்தின் (MGNREGS) சிறப்பம்சங்களை விளக்கக் கோரி நாடாளுமன்றத்தில் கள்ளக்குறிச்சி திமுக மக்களவை உறுப்பினர் மலையரசன் கேள்வி எழுப்பியுள்ளார்.

கடந்த மூன்று ஆண்டுகளில் தமிழ்நாட்டிற்குள் அத்திட்டத்தின் கீழ் வேலை வாய்ப்பு பெற்ற பயனாளிகளின் எண்ணிக்கை என்ன? கடந்த மூன்று ஆண்டுகளில் தமிழ்நாட்டிற்குள் MGNREGS ஐ செயல்படுத்துவதற்காக ஒதுக்கப்பட்ட மற்றும் பயன்படுத்தப்பட்ட நிதியின் அளவு? நிலையான வாழ்வாதாரங்களை வழங்குதல், கிராமப்புற உள் கட்டமைப்பை மேம்படுத்துதல் மற்றும் வறுமையை ஒழித்தல் ஆகியவற்றில் அதன் செயல்திறனை அளவிடுவதற்கு MGNREG திட்டத்தின்கீழ் அரசு செய்துள்ள மதிப்பீட்டு விவரங்கள் என்ன? வெறும் உடல் உழைப்புக்கு அப்பால் திறன் வாய்ப்புகள் அல்லது வாழ்வாதார உருவாக்கத்தில் வேலைவாய்ப்பு வழங்கப்பட்ட பயனாளிகளின் எண்ணிக்கை மற்றும் MGNREG திட்டத்தை விரிவுபடுத்த அல்லது சீர்திருத்த அரசாங்கத்திடம் உள்ள திட்டங்கள் என்ன? மேலும் பணி தரத்தை மேம்படுத்துதல் மற்றும் மேலாண்மைக்கான தொழில்நுட்பத்தை ஒருங்கிணைப்பது ஆகியவை குறித்த திட்டங்கள் என்ன என அவர் விரிவான விளக்கம் கோரியுள்ளார்.

### 7. நூறுநாள் வேலை திட்டத்தின்கீழ் உள்ள நிலுவைத் தொகைகள் எவ்வளவு?

**தங்க தமிழ்செல்வன் கேள்வி!**



கடந்த மூன்று ஆண்டுகளில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டிற்கு விடுவிக்கப்பட்ட மொத்த தொகையை ஆண்டுவாரியாக வெளியிடுமாறு இன்று நாடாளுமன்றத்தில் தேனி மக்களவை உறுப்பினர் தங்க தமிழ்செல்வன் ஒன்றிய அரசிடம் கேள்வி எழுப்பியுள்ளார். 20242025 நிதியாண்டில் இத்திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டிற்கு வழங்க வேண்டிய ரூ. 4034 கோடி நிலுவைத் தொகையை ஒன்றிய அரசு இன்னும் விடுவிக்காதது ஏன் என்றும் அவர் கேட்டுள்ளார்.

### 8. நூறு நாள் வேலை திட்டத்தில் பெண்களுக்கு வேலைவாய்ப்பு!

**பொள்ளாச்சி ஈஸ்வரசாமி**



மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதித் திட்டத்தின் கீழ் பெண்களின் வேலைவாய்ப்பு விகிதம் (MGNREGS) கிராமப்புறங்களில் பல ஆண்டுகளாகக் குறைந்துள்ளதற்கான காரணங்கள் குறித்து பொள்ளாச்சி மக்களவை உறுப்பினர் கே. ஈஸ்வரசாமி கேள்வி எழுப்பியுள்ளார்.

கடந்த மூன்று ஆண்டுகளில், மாநிலம்/யூனியன் பிரதேசங்கள் வாரியாக, MGNREGS இன் கீழ் வேலைவாய்ப்பு வழங்கப்பட்ட பெண் தொழிலாளர்களின் எண்ணிக்கை என்ன? MGNREGS இன் கீழ் பெண் தொழிலாளர்களின் பங்களிப்பை அதிகரிக்க அவர்களுக்கு நிலையற்ற/அட்டவணை வேலைகளை வழங்க அரசாங்கம் முன்மொழிகிறதா? அப்படியானால், அதன் விவரங்கள்; மற்றும் இது தொடர்பாக அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் விவரங்கள்? என்றும் அவர் கேட்டுள்ளார்.